


23344
T4507

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



8

1976 ஏப்பிரல்

# தேனோலை

பழஞ்சுவடிக் காலாண்டிதழ்

இதழ் எட்டு — எப்பிரல் 1976

விலை ரூ. 1 - 00

ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 00

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

# தேனோலை எண்கள்

தேனோலை ஏழு இதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் வெளிவந்துள்ள பட்டயங்களுக்கும் சுவடிகளுக்கும் பின்கண்ட வரிசை எண்களை இட்டுக் கொள்ள வேண்டுகிறோம்.

தேனோலை எண் 1/1974 மதுக்கரைப் பட்டயம்

தேனோலை எண் 2/1974 பூர்வச் சக்கர்வர்த்தி நாடகம்

தேனோலை எண் 3/1975 கொங்குப் புலவர் பட்டயம்

தேனோலை எண் 4/1975 மங்கல வாழ்த்து

தேனோலை எண் 5/1975 சென்மப் புலவர் பட்டயம்

தேனோலை எண் 6/1975 காளிங்கராயன் அணை கட்டிய பட்டயம்

தேனோலை எண் 7/1975 மல்லிகுந்தம் பட்டயம்

தேனோலை எண் 8/1975 மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை

தேனோலை எண் 9/1976 காளிங்கராயன் கைபீது

தேனோலை எண் 10/1976 மோரூர்க் காங்கேயர் ஏடு

தேனோலை எண் 11/1976 கும்பினிக் கடிதம் (காளிங்கராயன்)

எழுத்துச் சீர்மை

1. உயிர் நெடில்களுக்குக் கால் வாங்குதல்
2. உகர ஊகாரங்களுக்குப் பக்கக் குறி இடுதல்

தேனோலை எண் 12/1976

# வாய் மொழித் தீர்ப்பு

| | | |
|---|---|---|
| பொருள் | : | செப்புப் பட்டயத்தின் காகித நகல் |
| தகவலர் | : | குண்ணாங்காட்டு வலசு மணியக்காரர் திரு. கே. கே. முத்துசாமிக் கவுண்டர் |
| இடம் | : | கோவை மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி சின்னியம்பாளையம் திரு. S. V. பழனிச்சாமிக் கவுண்டர் வசம் செப்புப் பட்டயம் உள்ளது. |
| படித்தவர் | : | புலவர் செ. இராசு, B.Lit. |
| நாள் | : | 18-7-76 |
| செய்தி | : | மதுரை நாயக்கர் காலத்தில் வெள்ளோட்டில் அதிகார மாற்றம் நடந்த செய்தி. |
| காலம் | : | கி.பி. 1588 |

முதல் பக்கம்

## செப்பேடு

ஶ்ரீமஜெயம் துணை

வாய்முளி[1] தீர்ப்பு

ஶ்ரீராயர் சாமானிய ராசஸ்ரீ மகாமண்டலேஸ்வரராகிய
மதுரை தேசம் அரசாட்சி செய்யப்பட்ட மகா றாசாத்திர
ஆளாகி திருமலை நாயக்கரவர்கள் நாளையில் நடந்து வந்த
வயனம்[2] புதுப்பாளையம் கிறாமம் புங்கம்பாடி கிறாமம் கொம்மக்

கோவில் கிறாமம் ஞானிபாழையம் கிறாமம் மயிலாடிக்
கிறாமம் கனகபுரம் கிறாமம் இந்த ஆறு கிறாமம்[3]
அதிகாரிகளாகிய வெள்ளை வேட்டுவன்[4] வெள்ளை
பெரிச்சி மூப்பன்[5] இவர்கள் நாளையில் தென்தேசத்தி
லிருந்து வல்லிபுறத்துச் சாத்தந்தை[6] கூட்டம் பெரியண கவுண்டன்

மகன் மூத்துக் கவுண்டன் இவர் ... ... ... ...
இருக்கப்பட்ட சீர்மையில் 12 வருஷம் ... ... ... ...
ஷெயார்கள் இருவரும் நாலு ... ... ... ...
க்கொண்டு மேல்கண்ட பூந்துறை நாடு ... ... ... ...
மங்களில் 12 வருஷக் காலம் பில்லு ... ... ... ...
ருந்தபோது ஷெ மாட்டினாலே நூறு நூற்றைம்பது கா ...
மாகி இப்படி யிருக்கும் தருணத்தில் மேலே கண்ட
முத்துக் கவுண்டன் யென்பவன் தன் தகப்பனை மாட்டு
களிடம் இருக்கும்படி விட்டுப்போய்த் தங்களூருக்
குப் போயி ... ... ... ... ... ... ... ... ... மேல்
கண்ட கிறாம அதிகாரிகள் வெள்ளை வேட்டுவரும்
வெள்ளை பெரிச்சி மூப்பனும் ஷெ கால்நடைகளை
பெரியண கவுண்டனை வெட்டிப் போட்டு ஷெ
கால்நடைகளைக் கொள்ளை செயிது கொண்டு
போய் விட்டார்கள். அவ் வேளையில் முத்துக் கவுண்டன்
வந்து தகப்பனை விசாரிச்சதில் நடந்த சமாசாரத்தை

## இரண்டாம் பக்கம்

சில ஜனங்களால் கேள்விப்பட்டு மேல் அதி
காரிகளாகிய நரசிமராஜா தம்பி சிவக்குராஜா[7] இவர்
களைக் கண்டு பிராது[8] செயிததில் ஷெ றாசா கேள்வி
செய்யாது[9] விட்டபடியால் ஷெ முத்துக் கவுண்டன் மதுரை
க்குப் போயி திருமலை நாயக்கர் அவரிடத்தில் கேட்டு
க் கொண்டபடி அவராய்வு செய்து [10] சில தண்டு [11]
இவருக்கு ஒதவியாக அனுப்பினபடியால் தண்டு கூட
ஷெ முத்துக் கவுண்டன் ஷெ புதுப்பாளையம் வகையறா கிறாமமும்
கொள்ளையிட்டுஷெவெள்ளை வேட்டுவனையும் வெள்ளை பெரிச்சி
மூப்பனையும் தலை வெட்டுகிறதுக்கு ஆரம்பித்தபடியால்
ஷெ இருவரும் ஷெ முத்துக் கவுண்டனை ரொம்பவும் வண
... ... ... ... யால் எங்களை விட்டு விடு ஜனம் பூ
... ... ... ... உள்பட்ட ஷெ ஆறு கிராமங்களையும்
... ... ... ... குடுத்து விடுகிறோமென்று சொன்
... ... ... ... மேல் விட்டு விட்டால் இந்த உடன்
... ... ... ... உடனே பாளையப்பட்டு அதிகாரிகள்
... ... ... ... லைராஜா இவர்களுக்கு சேதிகளை மதுரை
திருமலை நாயக்கர் அவர்களுக்குத் தெரியும்படி அவர்
முன்ம்பதாக மேல்கண்ட ஆறு கிறாமங்களில் வடமுகம்
புதுப்பாளையம் புங்கம்பாடி, கொம்மக்கோவில் இந்த மூணு
கிறாம அதிகாரி வெள்ளை, வேட்டுவன் தென்முகம்ஞா

விபாளையம் மயிலாடி கனகபுரம் கிறாமம் மூன்று இதற்கு
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... முதல்
கறையில் தேவதையிடம் வல்லிபுறம் ... ... அண்ண
மார் தேவகாரியமென்று தென்முகம் கறையில்
தேவதைகள் றாசாக்கள் பொங் காளியம்மனுக்கும்
மாறியம்மனுக்கும் நஞ்சுண்டசுவாமி[12] இந்தத் தேவதை
களுக்கெல்லாம் அபிசேகம் பொங்கல் பலி பூசை
நிவேத்தியம் மிறவவன[13] முதலானதுகள் செயிது ஆண்டி

மூன்றும் பக்கம்

பரதேசி சோசி சொங்கு மாகத்துக்குப்படி கவி
பாடி[14] பிறாமணாள் முதலான பேருக்கு சம்பிரட்சணையும்
தான தருமங்களும் குடுத்து மேல்கண்ட றாசாக்களையும்
பூசித்து பெரிய கோவில் இருந்து கொண்டு செப்
பேடு பட்டையம் செயிது கொடுத்த விபறம் ஆத்து
மணலும் ஆவிரம்பூவுமுள்ள மட்டும்[15] ஷை முத்துக்க
வுண்டனுக்கும் காணியாச்சி குடுத்தபடி ஆறு
கிறாமமும் அதிலிருக்கப்பட்ட தேவஸ்தானங்க
ளுக்கு முந்தின பூசை விபூதி சந்தனம் பாக்கு வெத்திலை
பூவு முப்பாடு[16] பிறப்பாடு குதிரை பிடிக்கிறது முதலானதும்
ஷை முத்துக் கவுண்டனாகிய வல்லிபுறம் சாத்தந்தைக்கு
காணியாச்சி கொடுத்துவிட்ட பின்பு ... ... நாளையில்
முத்துக் கவுண்டன் வம்சத்தில் ஆ ... ... ... ... ... ...
விருத்திநால் மேட்டறப்பாளய ... ... ... ... ... ...
லிங்கய கவுண்டன் வெள் ... ... ... ... ... ... ... ...
வேட்டுவன் முத்துக் கவுண்டன் ... ... ... ... ... ... ...
அரசாக்ஷி செயிது மதுரைக்கு ... ... ... ... ... ...
பணம் செலுத்தாமல் பாக்கி நின்ன ... ... ... ... ... ...
வரையும் ஆக்கினை[17] செய்ய மதுரை ... ... ... ... ... ...
ஷை யார் பெண்ஜாதிகள் திங்களூர் பூமன் காப் ... ... ... ... ...
காளி மூப்பன் மகன் பொன்னய மூப்பனைக் கண்டு
யென் புருஷமார் தலை தப்பித்து வைத்துக் கொண்டு வந்தால்
யெங்கள் காணியாச்சியில் பாதி கொடுத்து விடுகிறோம்
யென்று சொன்னதில் 6 ஒட்டகைப் பணம்[18] கொண்டு
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
.................................................
.................................................

நான்காம் பக்கம்

உண்டு பண்ணிக் கொடுத்ததாய்க் கேள்வி பூந்துறை நாடு
கொங்கு 24 பொன்னய மூப்பன் குழம் கலியுக
வருஷம் நாலாயிரத்து அறுநூத்தி ... ... ... ... சாலி வாகன சகாத்
தத்தில் 1510 வைய்யாசி.[19]

— சரியான நகல் —

1. வாய்முளி — வாய்மொழி
2. வயனம் — விபரம்
3. எல்லா ஊர்களும் வெள்ளோட்டைச் சூழ்ந்து இருப்பன.
4. காலிங்கராயன் காலமுதல் இருந்து வந்த வேட்டுவர் வழியினன்
5. நாடார் குலம்
6. வல்லிபுரம் — சாத்தந்தை குலத்தின் காணி ஊர்களில் ஒன்று.
7. மதுரை நாயக்கர் அதிகாரிகள் பெயர்.
8. பிராது — புகார்
9. விசாரியாமல்
10. விசாரணை செய்து
11. தண்டு — படை
12. நஞ்சுண்ட சுவாமி — சிவன்.
13. மிறவனை — சுவாமி புறப்பாடு, ஊர்வலம்
14. கவிபாடி — புலவர்
15. ஆத்து மணலும் ஆவிரம்பூவுமுள்ள மட்டும் — சுவையான நல்ல தொடர்.
16. முப்பாடு — உரிமை
17. ஆக்கிணை — தண்டனை
18. முத்துக் கவுண்டன் வாரிசுதார் மதுரைக்குச் செலுத்த வேண்டிய பணம்.
19. காலத்தைக் குறிக்குமிடத்தில் ஏதோ தவறு உள்ளது பட்டையத்தின்படி காலம் கி.பி. 1588.

## பட்டையச் செய்திகள் :

மதுரையில் திருமலை நாயக்கர் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம். வெள்ளோட்டைச் சுற்றியுள்ள புதுப்பாளையம், புங்கம்பாடி, கொம்மக் கோயில், ஞானிபாளையம், மயிலாடி, கனகபுரம் ஆகிய ஆறு கிராமங்களையும் ஆண்டு வந்த அதிகாரிகள் வெள்ளை வேட்டுவன், வெள்ளைப் பெரிச்சி மூப்பன் ஆகிய இரண்டு பேருமாவர்.

தென் தேசத்தில் 12 ஆண்டு பஞ்சம் வந்துவிட்டது. வல்லி புரத்து சாத்தந்தை கூட்டத்தைச் சேர்ந்த பெரியாக் கவுண்டர், அவர் மகன் முத்துக் கவுண்டர் இருவரும் பூந்துறை நாடு வந்து மாடு, கன்று வைத்துப் பிழைத்து வருகின்றனர். தந்தை பெரியாக் கவுண்டரை மாடு, கன்றுகள் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி விட்டு மகன் முத்துக் கவுண்டர் சொந்த ஊர் சென்று வருகிறார்.

அந்த வேளையில் பெரியாக் கவுண்டரைக் கொன்று போட்டு விட்டு, அவரது கால்நடைகளை, அதிகாரிகளான வெள்ளை வேட்டுவனும், வெள்ளைப் பெரிச்சி மூப்பனும், கொள்ளையிட்டுச் சென்று விடுகின்றனர். முத்துக் கவுண்டர் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் ஊர் மக்கள் மூலமாக செய்தியை அறிந்துகொண்டு, மேலதிகாரிகளான நரசிம்ம ராஜா, தம்பி சிவக்குமார ராஜா ஆகியோர்களிடம் புகார் செய்கிறார். அவர்கள் இதை விசாரிக்க வில்லை. அதனால் மதுரை சென்று திருமலை நாயக்கரிடம் புகார் செய்கிறார்.

இதனைக் கேட்ட திருமலை நாயக்கர் நன்றாக ஆராய்ந்து, முத்துக் கவுண்டருக்கு உதவியாக ஒரு படையினை அனுப்பி வைக்கிறார். படையின் உதவியுடன், முத்துக் கவுண்டர் அதிகாரிகளான வெள்ளை வேட்டுவனையும் வெள்ளைப் பெரிச்சி மூப்பனையும் பிடித்து, அவர்களின் தலைகளை வெட்ட முயல் கின்றார்.

"எங்களைக் கொல்லாமல் விட்டுவிடுங்கள். இந்த ஆறு கிராமத்தையும் உங்களுக்கே கொடுத்துவிடுகிறோம்" என்று கெஞ்சி உயிர்ப்பிச்சை கேட்கின்றனர். முத்துக்கவுண்டர் அவ்வாறே உயிர்ப்பிச்சை அளித்துவிட்டுத் திருமலை நாயக்கருக்குச் சேதி சொல்ல, மன்னர் இவரையே அதிகாரியாக நியமித்தார்.

வல்லிபுரம் அண்ணன்மார், தென்முகம் கறையில் ராசாக்கள், பொங்காளியம்மன், மாரியம்மன், நஞ்சுண்ட சாமி ஆகிய தெய்வங்

களுக்குப் பலி, பூசை, நைவேத்தியம், ஊர்வலம் முதலியன செய்து அன்னதானமிட்டு, தருமங்கள் செய்து ராசாக்கள் பெரிய கோயிலில் இருந்துகொண்டு காணியாச்சி அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஆற்று மணலும், ஆவாரம் பூவும் உள்ள மட்டும் முத்துக் கவுண்டருக்கும், காணியாச்சி அதிகாரம் தந்து கோயில்களில் முதல் பூசை, விபூதி, சந்தனம், பாக்கு, வெற்றிலை, பூ, முப்பாடு, புறப்பாடு, குதிரை பிடிக்கிறது முதலிய உரிமை வழங்கப்படுகிறது.

(இதற்கு மேலுள்ள செய்தி, பட்டயத்தில் சரியாகப் படிக்க இயலவில்லை எனினும் ஓரளவு ஊகிக்க முடிகிறது)

முத்துக்கவுண்டன் மக்கள், மதுரைக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கிகளை ஒழுங்காகச் செலுத்தாததால், அவர்களை மதுரை மன்னர் பிடித்துச் செல்கின்றார். அவர்களின் மனைவிமார் திங்களூர் காளி மூப்பன் மகன் பொன்னைய மூப்பனைக் கண்டு, எங்கள் கணவன் மாரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தால், எங்கள் காணியாச்சியில் பாதி தருகிறோம் என்று கூறிப் பணமும் அளிக்கின்றனர்.

(பின்னர் மேல் விவரம் தெரியவில்லை. எனினும்) பொன்னைய மூப்பன் காணியாச்சி அதிகாரம் பெறுகிறான். இது நடந்த காலம் கி. பி. 1588.

தேனோலை எண் 13/1976

# திருமலை நாயக்கர் வமிசாவளி

பொருள் : காகிதப் படி.

தகவலர் : குண்ணாங் காட்டு வலசு மணியகாரர் திரு. கே. கே. முத்துசாமிக் கவுண்டர்

இருப்பு : சிவகிரி-சின்னியம் பாளையம் புலவர் S. V. பழனிச்சாமிக் கவுண்டர் வசம் இருந்தது.

படித்ததர் : புலவர் செ. இராசு

நாள் : 18-7-76

## சிவகிரி ஏடு

### மதுரைச் சீமையை ஆண்ட கர்னாடக ராஜாக்களின் வரலாறு

சாலிவாகன சகாப்தம் 1482 இங்கிலிஸ் வருசம் 1559-60 தமிள் ரவுத்திரி வருசம் மார்களி மாதத்தில் கொட்டியம நாகமனாயக்கர் குமாரன் விசுவநாத நாயக்கர் அரசாட்சிக்கு வந்து ருத்துரோத்காரி வருசம் மார்களி மாதம் வரை பட்டம் ஆண்டு 1563 வருசம் டிசம்பர் கத்திலிறந்து போனார்.

அப்பால் ஷியார் குமாரன் குமாரகிருஷ்ணப்ப நாயக்கர் ருத்துரோத்காரி வருசம் தைமாதம் முதல் ஆங்கிரஸ வருசம் தை மாத வரைக்கும் பட்டம் ஆண்டு 1573 வருசத்திலிறந்தார்.

அப்பால் ஷியார் மூத்த மகன் பெரிய வீரப்ப நாயக்கர் ஆங்கிரஸ வருசம் மாசி மாதம் முதல் மன்மத வருசம் கார்த்திகை வரைக்கும் ராஜரீகம் செயிது 1595 வருசத்திலிறந்து போனார்.

அப்பால் ஷி. பெரிய வீரப்ப நாயக்கற்கு பின்பு நாயக்கராகிய குமாரர் கிருஷ்ணப்ப நாயக்கர்......யக்கனாகித விசுவநாத

நாயக்கர் ரெண்டு பேரில் விசுவப்ப நாயக்கருக்குப் பட்டமும் லிங்கம நாயக்கருக்கு இளவரிசைப் பட்டமும் கட்டி ஷெ விசுவப்ப நாயக்கர் ஜனவரி 1600 வருசத்தினால், அப்பால் இள வரிசைப்பட்ட நாளில் லிங்கம நாயக்கர் சுபகிருது வருசம் வய்யாசி மாதம் மாள, 1602 ராஜரீகம் செய்து இறந்து போனார்.

அப்பால் ஷெ லிங்கம நாயக்கனாகிய குமாரகிருஷ்ணப்ப நாயக்கருடைய குமாரன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருக்கு அவர் சிறிய தகப்பனான கஸ்தூரி ரெங்கப்ப நாயக்கர் சொல்ப்ப நாளும் அப்பால் ஷெ முத்துக்கிருஷ்ண்ப்ப நாயக்கரும் றாஜரீகம் செயிது 1609ல் இறந்து போனார்.

அப்பால் ஷெ முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு முத்துவீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் குமாரமுத்து நாயக்கர் யென்ற மக்களில் முத்துவீரப்ப நாயக்கர் 1609 வருஷத்தில் பட்டத்துக்கு வந்து 1622 வருசத்தில் இறந்து போனார்.

அப்பால் திருமலை நாயக்கர் பட்டத்துக்கு வந்து 1659 ஆம் வருசத்தில் இறந்து போனார்.

அப்பால் பட்டத்துக்கு வந்த லக்க நாயக்கர் முத்து வீரப்ப நாயக்கர் மூணு மாசம் பட்டம் ஆண்டு இறந்து போனார்.

அப்பால் சொக்கநாத நாயக்கரான சொக்கப்ப நாயக்கர் பட்டத்துக்கு வந்து கொண்டிருக்கும்போதே 1677 வருசத்தில் அவர் சகோதரன் முத்தலி நாகம நாயக்கர் பட்டத்துக்கு வந்து ஆண்டவரை விலக்கி மூந்திய சொக்கப்ப நாயக்கருக்கு பட்டங் கட்டி அவர் 1681 வருசம் வரை பட்டம் ஆண்டு இறந்து போனார்.

அப்பால் அவருடைய மூணு மாசத்திய குழந்தையான விஜயறெங்க சொக்கநாத நாயக்கருக்குப் பட்டங்கட்டி அவருக்குப் பிதாமகியும் ஷெ றங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கருக்குத் தாயாருமான மங்கம்மாள்.... யென்று பேர் விளங்கிய விஜய றெங்க சொக்கநாத நாயக்கன் பட்டத்துக்கு வந்து றாஜரீகம் செயிது 1731 வருசத்தில் சந்ததியின்றி யிறந்து போனார்.

உடனே ஷெயார் சமுசாரமான மீநாக்ஷியம்மாள் பட்டத் துக்கு வந்து தன் சகோதரன் வெங்கிடப் பெருமாள் நாயக்கரை முன்னிட்டுக் கொண்டு பட்டமாண்டு விஜய குமார முத்துத் திருமலை என்பாரை ஸ்திரீகாரம் செயிதுகொண்டு அவர் பேருக்கு

பட்டமாண்டதில் 1734 வருசத்தில் படெசா கலாபம் வந்து கர்நாடகம் எடுபட்டுப் போயி துலுக்காணமாயிவிட்டது.

வரலாறு :

நாயக்கர் வரலாற்றிற்கு இது ஒரு முக்கியமான ஆதாரமாகும். அ.கி. பரந்தாமனார் அவர்கள்தான் நாயக்கர் வரலாற்றைத் தெளிவாக ஆராய்ந்து அறிவித்தவர். அவருடைய காலக் கணிப்பிற்கும், இக் கைபீதிற்கும் உள்ள சிற்சிறு மாறுபாட்டை இணைத்துள்ள பட்டியலில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

நாயக்கர் பரம்பரை வரலாற்றை ஆராய்வோர், இதனையும் சேர்த்து ஆராய்வார்களாக.

| | அ.கி. பரந்தாமனார் | சிவகிரி ஏடு |
|---|---|---|
| விசுவநாத நாயக்கர் | 1529—1564 | 1559—1563 |
| கிருஷ்ணப்ப நாயக்கர் I | 1564—1572 | 1563—1573 |
| வீரப்ப நாயக்கர் | 1572—1595 | 1573—1595 |
| கிருஷ்ணப்ப நாயக்கர் II | 1595—1601 | 1595—1600 |
| முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் | 1601—1609 | 1502—1609 |
| முத்து வீரப்ப நாயக்கர் I | 1609—1623 | 1609—1622 |
| திருமலை நாயக்கர் | 1623—1659 | 1622—1659 |
| முத்து வீரப்ப நாயக்கர் II | 1659—4மாதம் | 1659—3மாதம் |
| சொக்கநாத நாயக்கர் | 1659—1682 | 1662—1686 |
| முத்து வீரப்ப நாயக்கர் III | 1682—1689 | — |
| மங்கம்மாள் | 1689—1706 | — |
| விஜயரங்க சொக்கநாத நாயக்கர் | 1706—1732 | —1731 |
| மீனாட்சி | 1732—1736 | 1731—1734 |

தேனோலை எண் 14/1976

# பரராச சேகரன் பட்டயம்

---

பொருள் : செப்புப் பட்டயம்

படித்தவர் : இலங்கை, யாழ்ப்பாணம், தொல்லியல் கழகத் தலைவர் கலாநிதி பத்மநாபன்

செய்தி : இலங்கை யாழ்ப்பாணத்து அரசன் பரராச சேகரன், தில்லைச் சிதம்பரத்திற்கு அளித்த நன்கொடை விவரம்.

காலம் : சக 944 (?)

---

## பட்டயம்

1. ஸ்வஸ்தி சிரிமந் மஹா மண்டலேசுவரன் ஹரிஹராய விபாடன் பாஷைக்
2. குத்தப்புவ ராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு
3. கொண்டனாடு குடாதான் பூறுவ தக்ஷணை பஸ்சி மோத்தர
4. சதுஸ் ஸமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளிய பதி வேங்கடபதி தே
5. வம ஹாராயர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணியருளா நின்ற சாலிவா
6. கன சகார்த்தம் தொளாயிரத்து 404ன் மேற் செல்லாநின்ற சுபகி
7. ருது வருஷம் தை மாதம் குருவாரமும் சுவாதி நச்செத்திரமும்
8. பூறுவமும் கூடின சுபதினத்திலே யாட்பாணம் இராச்சிய
9. ம் பண்ணியிருந்த பரராசசேகர மகாராசா அவர்கள் சிதம்ப

10. ரத்துக்கு வந்து சிதம்பரேசரர் தெரிசனம் பண்ணி சபாப

11. திக்கு குண்டலமும் பதக்கமும் சாத்தி தில்லை மூவாயிர வருக்கும் கு

12. ண்டலம் போட்டு சுவாமிக்கு என்றும் கட்டளை நடக்கும் படி நி

13. த்திய மொரு வராகனுக்குப் படிக்கட்டளையும் தினமொன்று

14. க்கு ஐங்கல அரிசி நெய்வேத்தியமும் மடத்திலே பிட்

15. ச் சைக் கல அரிசியும் சுவாமிக்கு பரி வட்டமும் இப்படி எ

16. ந்த வேளை தறுமம் நடக்கும் படிக்கு முதலு வைச்சு வாகனம்

17. வைக்கிறதற்கு அங்கண ஒத்தியும் வாங்கி ஒரு நாளை

18. யிற் திருவிளாவும் நடப்பிச்சு வந்த பரதேசிகள் வந்த

19. வேலை யிருக்கிறதற்கு இராசாக்கள் தம்பிரான் தெரு வீ

20. தி என்று முன்னூற்றறுவது மனையும் வாங்கி வீடு கட்டி

21. நந்தாவனம் போடுகிறதற்கு நல்ல தண்ணிக் கிணத்து

22. க்கு கிளக்கும் தெற்கும் முப்பதினாயிரம் குளி நிலமும்

23. வாங்கி இ (ரா) சாக்கள் தம்பிரான் வெளியென்று கொத்தங்

24. குடியிலை பாதி ஊரும் வாங்கி யாட்பாணத்திலை தனது

25. இராச்சியத்துக்குள்ளை அச்சுவேலி புத்தூர் அளவெட்

26. டி இந்த மூன்று ஊரும் சறுவமான்யமாக சிதம்பர தறும

27. த்துக்கு (க்) கொடுத்து இந்தக் கட்டளை என என்றும் தறுமம்

28. விசாரிக்கும்படிக்கு இராசாவாசலுக்கு மந்திரிமாராகவும்

29. இராசவங்கிஷமாகவும் இருக்கிறவர்கள் தில்லியூர்

30. சேனாப (தி) யார் சிங்கையூர்ப் படை ஆண்டவர் தில்லியூர்

31. குலத்துங்கர் பரநிருப சிங்கள் குலநிருவாங்கப் படையா

32. ராச்சியாரிவர்கள் வங்கிஷத்திலே நாலுபேரும் சம்ம

33. திச்சு தங்களினத்துகளுள்ளே ஒருதரைக் காவிலே

34. ட்டித் தம்பிரானாராக வைத்து இராசாக்கள் தம்பிரானா

35. ர் திருச்சிற்றம்பல மென்றவருக்கு பட்டமுங்கட்டி வைத்

36. து என்றைக்கு(ம்) இந்தத் தறுமம் விசாரிச்சுக் கொள்ளும்

## இரண்டாம் பக்கம்

37. படிக்கு இந்த நாலு பேரையும் பரராசசேகரமக

38. ராசா இதப்படி கட்டளை பண்ணி தறுமம் நடக்கு

39. ம் படிக்கு கல்லு காவேரியும் புல்லு பூமியும் முள்

40. ள மட்டுக்கும் இவர்களே இது விசாரிச்சுக் கொளு

41. ம் படிக்கு கட்டளை பண்ணி எளுதிப் போட்டது இ

42. ப்படிக்கு பரராசசேகர மகாராசா அந்தத் தறுமத்து

43. க்கு யாதொரு சகாயம் பண்ணினவர்கள் அந்தத் சிதம்பரத் துறுமத்து

44. திலே அத்த சாமவேளை சபாபதி தெரிசனம் பண்

45. ணின பலன் பெறுவார்கள் இந்த(த்) தறுமத்து

46. க்கு யாதொரு அகிதம் பண்ணினவர்கள் சிதம்பரத் திலே தீயிட்

47. டவர்கள் போற தோஷத்திலே போவார்கள் இப்படிச்

48. சம்மதிச்சு இந்தப் பட்டயமெளுதினது பரர

49. ாசசேகர மகாராசா அவர்கள் தில்லியூர் சேனாபதி

50. யாரி சிங்கையூர்ப் படை ஆண்டவர் தில்லியூர் குலத்

51. துங்கர் பரநிருபசிங்க குல நிருவாங்கப் படையாரா

52. ட்சியார். அரிய நல்லறம் முற்றிஞோன் நன்றினு மத

53. னை(ப்) புரிதி யென்பவன் காப்பவன் புகலிருவற்கும் பெரு

54. குமப்பயன் பதின்மடங்கென்றனர் பெருநூல் கூறி

55. ய மாந்தர்கள் தீவினை வளிக்கு மீ தொக்கும் இந்தப் ப

56. ட்டையம் எளுதினது பரநிருபசிங்கப் படையாண்டவர்.

தேனோலை எண் 15/1976

# கூவலூர்ப் பாடல் சாசனம்

பொருள் : கல்வெட்டு

இடம் : காஞ்சிக் கோயில் நாட்டுக் கூவலூர் மத்தியபுரி ஈசுவரர் கோயில் முன் மண்டபக் கல்வெட்டு.

காலம் : அண்மைக் காலம் கி. பி. 1919.

சிறப்பு : அழகான ஆசிரியப்பா வடிவில் உள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ளது.

படித்தவர் : புலவர் செ. இராசு

கடல் புடை சூழ்ந்த காசினி தன்னில்
கலியுக மய்யா யிரத்திரு பதினில்
காளயுக் தியாண் டைப்பசி மதியில்
காஞ்சிக் கூவல் நாட்டுள் கூவலூர்
மத்யபுரி ஈசனென மறுபெயர் கொண்ட
நட்டூ ராண்ட நாயனார் தமக்கு
கூவலூர் வேளாண் குடிச்சாத் தந்தை
இளையண வேன்தவத் தெய்திய புதல்வன்
பழனி யப்பனும் ஒருபழனி யப்பன்சேய்
பசசையப் பனுமாய் இருவரும் மனமொத்து

எழுதிவைத் திட்ட தரும சாசனம்
கூவலூர் புதுவாய்க் கால்பாய் நஞ்சையில்
பரமன் மடைஎனும் பண்புள வயலில்
எங்களுக் குரிய ஏக்கரா நாலு
சென்டறு பத்து மூன்றரை யுடனே
மேவானிக் கிராமம் "ராஜவாய்க் கால்பாய்"
தேர்புளியல் எனத் திகழ்தரு நஞ்சை

ஏக்கரா ஒன்றும்இவ் விரண்டும் சேர்ந்து
ஏக்கரைந் துடன் அறுபத்து மூன்றரை
செண்டுங் கொண்டஇவ் விரண்டு பூமியும்

இருபத்து நாலடிச் சதுரக் குழிகள்
நானூத் திரண்டரை யுள்ள ததில்
வருடந் தோறும் வருந்தாணி யத்தில்
அவ்வக் காலத்து அரசிறை செலுத்தி
மீதி யுள்ளதில் பாதி தானியம்
காலையா லயத்தில் வேதம் ஓதியும்
மாலையிற் சிவன்உமைக் காயிர நாமமும்
கணபதி கந்தவேள் அஷ்ட்டோத் திரசதம்
சொல்லும் வைதிக அந்தணன் பெறவும்
பின்னும் பாதியில் பாதி தானியம்

அபிஷேக அர்ச்சனை செய்யும்
அன்ன நிவேதனமாச் செய்து பெறவும்
மீதி யுள்ளதில் வில்வம் விளக்கு
பாயச நிவேதனம் பண்ணிவித் தற்குமாம்
இறைவன் கோவில் தரும கர்த்தன்
எங்கள் குலத்தில் கந்தப் பனிடம்
விடுத்த பூமி தேவ தானம்
எங்கள் சந்ததிக் கிப்பூமி களில்
யாதொரு தொடர்பும் இல்லை அவர்கள்
தருமம் தன்னைத் தான்கவ னித்து
என்றுநீ டூழி நடத்த
மன்று ளாடுவார் மலர்ப்பதம் போற்றி.

இவ் விவரம் தற்கால ராஜாங்கத்தில் பதிவு செய்திருக்கும் பத்திரங்களில் பார்க்கலாம். இங்ஙனம் பழனியப்ப கவுண்டன் பச்சியப்ப கவுண்டன், மரகதாம்பிகை சகாயம்.

தேனோலை எண் 16/1976

# அதிசயமலை விருத்தம்

இடம் } சென்னைக் கீழ்த் திசைச் சுவடி நூலகம்
பொருள் } எண் D 2840

செய்தி : விசய மங்கலத்திற்கு அருகில் உள்ள அரசண்ணாமலை என்ற ஊரைப் பற்றியது.

வட்டமா மதிபரவு சென்னிமேல் படியில்வாழ்
  வித்திருந்த பெருமாள் நல்ல
வினை கடிந்த முதல் நேமீ சுரர் மலர் அடியிணையில்
  மலிவுமுடி வைத்த தாயே

திட்டமா யிவரவர்கள் கேட்ட பொன் கணக்கெலாம்
  சிட்டெழுதி முன்வைத்து நல்
செம்பொற் கபாடம் திருத்தாள் திறக்குமறு
  தினமும் அப் படிவைக்கவே

இட்டமா கியமண முடிந்தவி யாலயம்
  குடபூசை செய்திருந்த
தன்னில்வைத் திப்பால் அவர்க்காக
  அநேக அருள் செய்யவிலையோ

அட்டமா சித்திதரு கருநொச்சியும் புவியில்
  ஆருமறி யாத சுனையும்
அளவிலா மகிமையும் ''மங்கை''யம் பதியில்வாழ்
  அதிசெயா மலை யம்மனே!

தேனோலை எண் 17/1976

# ஊசிப்பாளையம் செப்பேடு

இடம் : கோவை மாவட்டம் ஈரோடு தாலூக்கா அறச்சலூர் அருகே உள்ள ஊசிப்பாளையத்தில் உள்ளது.

செப்பேட்டின் உரிமையாளர் :- ஊசிப்பாளையம் பொங்காக் கவுண்டர் மகன் திரு. பி. ஆறுமுகக் கவுண்டர்.

தகவல் அளித்தவர்:- திரு. ஓ. எஸ். துரைசாமிக் கவுண்டர்.

செப்பேடு படித்து நகல் எடுத்தவர் :- புலவர் செ. இராசு.

அளவு :- 16 அங்குலம் + 6 அங்குலம்; 23 வரிகள்.

படித்த நாள் :- 7-5-1976 (உ த வி யா ள ர் பத்தையம் பாளையம், வடிவேலு)

# செப்பேடு

உ

சிவமயம்

1. கலியுக சகாப்தம் * 3992ல்[1] * பிரபவ
 வருஷம் * தை மாசம் தாம்பிர சாசனம்
 சமல்கரைப் பூந்துறை
2. நாடு அர்ச்ச நகரம்[2] என்னப்பட்ட ஊசிப்
 பாளையத்திலிருக்கும்[3] சாந்தப் படை
 வேட்டுவ சாதி[4] சக்கரை
3. க் கவுண்டன்[5] க-நல்ல காளியப்பக்
 கவுண்டன் இருவரும் இருக்கயில்
 ஷெயார் வீட்டில் ஒரு வெள்ளைப்
4. பிள்ளை இருந்து ஒருவரும் கலியாணம்
 செய்யாமல் அனேக நாள் சும்மா
 யிருக்கும்போது[6] ஒரு நாள் சோனிய

5. னூரிலிருந்து மொளகு[7] வியாபாரி ஒரு
ஆளுடன் பண்ணைக் கிணத்தருகிலிறங்
கி[8] இருக்க அந்த ஆளைச்சா

6. ந்தப்படை வேட்டுவன் விசாரித்து கரய
வேட்டுவன்[9] காளியப்பக் கவுண்டன்
யென்று சொல்லத் தெரிந்து

7. தன் வீட்டுப் பெண்ணைக் கலியாணம்
செயிது கொண்டால் காணியாச்சி[10]
கொடுப்பதாய்ச் சொல்லிக் கலியாண

8. செய்து கொடுத்து சில காலஞ் சென்ற பிறகு
தன் தன் ஊருக்குப்[11] போய் வருவதாய்
சொல்லிப் போனான் வரு

9. முன் பத்ர காளிக்கு திருவிழா நடத்த
என்னையில்லாமல்[12] நடப்பித்தபடியால்
அந்த சாந்தப் படை

10. வேட்டுவனை[13] அடித்துத் துரத்தி விட்டு
அவன் வீடுவாசல் காணியாச்சி
எல்லாம் ஆண்டு கொண்டுயிருக்

11. க இவன் மகன் செய்யான் பல்லவராயன்[14]
மாடு மேய்த்துக்கொண்டு யிருக்கும்
போது ஒரு சங்கஞ் செடியில்

12. காராம்பசு தினம் பாலைச் சொரிய ஒரு
நாள் கண்டு அந்தச் செடியை
வெட்டும்போது மண்வெட்டியில்

13. இரத்தம் கண்டது பின்னும் பரிசோதிக்கக்
காயம்பட்டு இரத்தமயமாக ஒரு சுவாமி
இருக்கக் கண்டு[15] தகப்ப

14. னிடத்தில் சொல்ல அவன் வந்து பார்த்து
ஆலயங் கட்டுவித்து கும்பாபிஷேகஞ்
செய்ய பெருந்து

15. ரை வடிவேல் அய்யனைக் கொண்டு பூசை
செய்யும்படி செய்தான் செய்யான்
பல்லவராயக் கவுண்டன்

16. அம்மனுக்குத்[16] திருவிழா நடத்த தன்
சகலனைக் கொண்டு முப்பாடெடுக்க[17]
ஷெ செட்டியார்[18] நான் அம்ம

17. ன் கோவில் கட்டினேன் வுன் தகப்பனுக்குக்
காணியாச்சியும் பண்ணி வைத்தேன்
முதலில் விபூதி கொடு

18. க்க வேணுமென்று சொல்லக் கவுண்டன்
முதலில் நான் வாங்கிக் கொண்டு
இரண்டாவது வுனுக்குக் கொடுக்கு

19. ம்படி திட்டம் செயிது யிருக்கிறேன். இதற்க்கு
பாதகம் செய்தவனுக்கு காராம் பசுவுக்
கொன்ற[19] பாவ

20. ம் வருமென்று சொன்னேன். ஷெ கோயில்
பட்டிவரியில்[20] சிலாசானத்தின்படி[21]
சில ச

21. ங்கதிகளைக் காண்பித்துயிருக்கிறேன்.
யிதற்க்கு றாஜாக்கள் சில மானியம்
விட்டு இருக்குறார்கள்[22]

22. யிதற்கு யாதொருவற்கள் ஙிந்தனை செய்
தார்களோ அவற்கள் காராம் பசுவைக்
கொன்ற

23. பாவம் வரும் * *

1. 3992—3101: கி. பி. 891 (பொருந்திவரவில்லை)
2. அர்ச்ச நகரம்—அறச்சலூரின் பழம்பெயர். அறச்சாலையூர் என்றும் வழங்குவர்.
3. ஊசிப்பாளையம்—அறச்சலூர்ப் புற்றிடங் கொண்டீசர்கோயில் கல்வெட்டில் குறிக்கப்படுவது.
4. வேட்டுவரில் ஒரு உட்பிரிவினர்.
5. சக்கரைக் கவுண்டன்-ஏட்டுச்சுவடி, கல்வெட்டு செப்பேடு இவைகளில் இவ்வாறுதான் வருகிறது. எங்கும் 'சர்க்கரை' என வருவதில்லை.
6. இதுபோன்ற கதை பல இனத்தாரிடையே வழங்கப் பெறுகிறது.

7. மௌளகு-மிளகு.

8. பண்ணைக் கிணறு-அறச்சலூரின் கிழக்கே நான்கு கல் தொலைவில் உள்ள ஊர்.

9. கரய வேட்டுவன்-வேட்டுவரில் ஒரு பிரிவினன். பழமங்கலம் நடுகல் கல்வெட்டுக் காண்க.

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற சயம் பெருக—சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரயகுலச்
சொக்கனேந்த லேவுலகில் தான்'

10. காணியாச்சி—உரிமை

11. தன் ஊர்-சோழியனூர்

12. காளியப்ப கவுண்டராகிய தான் (மாப்பிள்ளை) இல்லாமல்.

13. மாமனாரை

14. செய்யான் பல்லவராயன் பெயர் அறச்சலூர் அறச்சாலையம்மன் ஆலயக் கல்வெட்டிலும், அறச்சலூர் புற்றிடங்கொண்டீசர் ஆலயக் கல்வெட்டிலும் குறிக்கப் பெறுகிறது. இப்பெயர் (செய்யான்) சிவந்தான் பல்லவராயன் என்றும் குறிக்கப்பெறும். ஒப்பு நோக்குக: "சிவந்தெழுந்த பல்லவன் உலா"

15. இக்கதை பல தலங்களில் வழங்குவது,

16. அம்மன்-அறச்சலூர் பத்ர காளியம்மன்

17. மூப்பாடு-உரிமை

18. செட்டியார்-மிளகு வியாபாரி

19. காராம்பசு-கறவைப் பசு

20. பட்டிவரி-பட்டிகை வரி

21. சிலாசாசனம்-கல்வெட்டு

22. மானிய விபரம் :-

(அ) 'சித்திரை மாதம் 15 ஆம் தியதி புதவாரமும் புனர்பூச நெட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் பூந்துறை நாட்டு அறச்சலூரில் புற்றிடங் கொண்ட இசுபறலிங்கனாதருக்கு மண்டப் பாரைக் காட்டுக்கும் தெற்கும் பள்ளக்காட்டுக்குக் கிழக்கும் புதுப்பாளையந்துக்குப் போற இட்டேறிக்கு வடக்கும் ஊசிப்பாளையத்துப் பாசப்

பறுப்புக்குப் போற இட்டேறிக்கு குளனாங் கல்லுக்குக் கீழ்புரத்து மார்க்கம் இந்த நால்பாங்கு யெல்லையும் கல்லு சாசனம் போட்டுக் குடுத்தது.
— தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் I எண் 237

(ஆ) "அப்பிசை மாதம் 5 ஆம் தியதி திங்கள்கிழமை அசுவனி னெஷ்திரம் கூடிய சுபதினத்தில் பூந்துறை நாட்டில் அறச்சலூர் புற்றிடம் கொண்டசுவற சுவாமியாருக்கு ஊசிபாளையத்துக்கு வடக்கு நாக மலைக்குத் தெற்கு வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்கு யிந்த நாலு பாங்கு எல்லையும் சூலக்கல்லு போட்டு சாசனம் யெளுதிக் குடுத்தது யிந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்கள் அசுவமேதயாகம் பண்ணின பலனை அனுபவிப்பார்கள். யிந்த தர்மத்தை அசுத்தம் பண்ணின பேர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷம் போகக் கடவானாகவும்"

— தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் I எண் 238

பின்குறிப்பு:- இப்பட்டயத்தின் காலம் ஒத்துவரவில்லை, அதாவது கி. பி. 891 ஆம் ஆண்டு பிரபவ அல்ல.

சாமிக்கண்ணுப் பிள்ளையின் காலக் கணிப்பில் கண்டோர் எழுதுக.

தேனோலை எண் 18/1976

# அலங்கியம் கல்வெட்டு

| | |
|---|---|
| இடம் : | தாராபுரம் தாலுக்கா, அலங்கியம் கலியுகக் கண்ணீசுவரர் கோயில், கல்வெட்டு. |
| அரசன் : | வீரபாண்டியன் |
| காலம் : | ஆட்சியாண்டு 27 (கி.பி. 1287) |
| படி எடுத்தவர் : | புலவர். செ. இராசு |
| மொழி : | தமிழும் கிரந்தமும். |

வீர பாண்டிய தேவர்க்கு யாண்டு இருபத்தி ஏழாவது
வைகாசி 5 ஆம் தேதி தென் பொங்கலூர்
கால் நாட்டு அலங்கியமான

உத்தம சோழ நல்லூர்க் காணியுடைய சிவபிராமண
ரோம் உடையார் கலியுகக் கண்ணீசுவர
முடையார் கோயில் காணியா

ளரில் நயினார் திருக்காமக் கோட்டத்து நாச்சியார்
தேவர்கள் தம்பிராட்டியாரை எழுந்தருளு
வித்துப் பாண்டி

மாடக் குளக்கீழ் மதுரையில் திருமடைப்பள்ளியாரில்
காண இனிய பெருமானான விசயிங்க
தேவர் பன்

மரான அழகாண்டான் தங்கள் மாதாக்கள்
பேரால் எழுந்தருளுவித்த நாச்சியார்க்கு
அமுதுபடிக்கு இக்கோயில் காணி

உடைய சிவபிராமணரும் கவிசிகள கோத்திரத்தில்
வீரசோழபட்டன் உள்ளிட்டாரும் உத்தம
சோழச் சக்கரவர்த்தி

க்ள் உள்ளிட்டாரும் சோமன் பெருமாளி
உள்ளிட்டாரும் சைவாதரா்யன் உள்
ளிட்டாரும் முத்திக்கு நாயக நம்பி உள்
ளிட்டாரும் வெஞ்சனத்து

அமுதுபடிக்கு அரிசி முன்னாழியும் இவ்வரிசி
முன்னாழியும் குடங்கொண்டு கோயில்
புகுவான் சந்திராதி

த்தவரை செலுத்துவோமாகவும் பன்மாகேஸ்வரர்
ரட்சை.

குறிப்பு : கி.பி. 1004 முதல் கொங்கு நாட்டைச் சீரும் சிறப்புமுடன் ஆட்சி புரிந்த கொங்குச் சோழருள் ஒருவனான உத்தம சோழச் சக்கரவர்த்தி பாண்டியருக்கு அடங்கிய ஒரு அரசியல் தலைவனாகி விட்டான் என்பதை இக் கல்வெட்டு நமக்கு உறுதிப் படுத்துகிறது.

தேனோலை எண் 19/1976

# பொன்பரப்பிபட்டிக் கல்வெட்டு

---

இடம் : சேலம் மாவட்டம் பொன்பரப்பிபட்டி பெருமாள் கோயிலில் உள்ள குத்துக்கல்

அரசன் ; பரகேசரிப் பட்டமுடைய சோழன்

காலம் ; அவனது பதினைந்தாம் ஆட்சியாண்டு

மொழி : தமிழும் கிரந்தமும்

படித்தவர் : புலவர் செ. இராசு

---

## கல்வெட்டு

### முதல் பக்கம்

ஸ்வஸ்திஸ்ரீ "சண்டேசுர னோலை தா
பரஞ்சூல் வையகத்துக் கண்டீசன்
கரும மாராய்க—பண்டேய் அ
றஞ் செய்தான் செய்தான் அறங்க
ரத்தான் பாதந் திறம்பாமல் செ
ன்னிமேல் வைத்து அருளாலாதி
சண்டேசுர னாதேசம் பொன் பர
ப்பி உடையார் திருவாசல் சே
ரமான் பெருமாள்—திருக்காவ
ணமான சீ வீர பத்திரன் காவண
த்து சீருத்திர மகேசுரரும்
பதி நெட்டிராச்சியத்தில் தேசாந்திரி

### இரண்டாம் பக்கம்

களும் மகிமை திகழும் கோ
பரகேசரி ...... தேவர்க்குயா...

பதினைஞ்சாவது .........
......... அருளாளரும் நி
றைவற நிறைஞ்சு இவ்வூ
ரில் மன்றாடிகள் நாங்கள்
பிடிபாடு குடுத்தோம் இவ்வூர்
பொன் பாப்பீசுர முடையா
ர்க்கும் திரு ஏகம்ப முடையா
ற்கும் இருவரும் திருவிளக்கெ
ரிக்கக் குடுத்தோம் இவர்தர்ம
த்தை அழித்தவன் வீரபத்
திரத்தே படக்கடவன்
அருளால் நாற்பத் தெ
ண்ணுயிர சீ காணத்தா
ன் எழுத்து

குறிப்பு : முதல் ஆறு அடிகள் ஒரு பாடலைப் போலத் தோன்று கிறது.

சண்டேசுவர னோலை தாபரஞ் சூழ் வையகத்துக்
கண்டீசன் கரும மராய்க—பண்டேய்
அறஞ் செய்தான் (செய்தான்) அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னி மேல் வைத்து

நல்ல தொடர்கள் : சேரமான் பெருமான் திருக்காவணம்
சீ வீர பத்திரன் காவணம்

ஒப்பியவன் : நாற்பத்தெண்ணாயிரம் சீ காணத்தான்,

தேனோலை எண் 20/1976

# எண்ணமங்கலம் கல்வெட்டு

இடம் : பவானி வட்டம், எண்ணமங்கலம், புங்கமடுகு அருகே வாவித் தோட்டம் அருகே கிடக்கும் கல்

அரசன் : வீரவல்லாள தேவன்

காலம் : சீமுக ஆண்டு பங்குனி 30

படித்தவர் : புலவர் செ. இராசு, பி. லிட்.

## கல்வெட்டு

ஸ்வஸ்தஸ்ரீ
வீர வல்லாள தே
வர் பிருத்விராஜ்ய
ம் பண்ணி அரு
ளா நின்ற சீமுவ
வருஷத்துப் பங்
குனி மாதம் ௩௰
தீ வடகரை நா
ட்டில் கிலம் பூரி
ல் நாயினார் பந்தீ
ஸ்வர முடையார்
இறங்க லாய்க்கி
டக் கையில் இ
வ் விறங்கல் மா
ட் டுவ்வூர்க் கிசைய
ம் பண்ணி அ
முது படிக்கு இ
வ்வூரில் நிலத்
திலே னாராயினா
ர் கொல்லருக்கு
நிலம் கீழ்பாற்
கெல்லை இட்டே
டறிக்கு மேற்குஇ
தன் வடபாற்கெ
கல்லை வம்ம
கவுண்டன்
நிலம் பூமி
க்குத் தெற்கு இத
ன் மேல் பாற்
க்கெல்லை ஆ
ற்றுக்குக் கிழக்
கு இதன் தெ
ன் பாற் கெல்
லை ஊர் மதிளு
க்கு வடக்கு
இன்னான்
கெல்லைக்
குட்பட்ட நி
லம்மிக கவி
யம் இறை
யிலியே
போகம
ாகக் கல்
வெட்டிக்கு
டுத்தோ
ம் இவ்வூர்க்
காணியு
டைய கு

றும்பர்க
ளோம்
இப்படி
க்கு சிற
ம கவு
ண்டன்
ன் இவி
பந்தன் எ
ழுத்து இவ
ன் தம்பி இர
ாசாக கவுண்
டன் எழுத்து
இவன் தம்
பி சொன்
ண கவுண்
டன் எழுத்து
இவன் மகன்
பெரியப்பன்
குப்பன் எழு
த்து இப்படி
க்கு பெரிய
மாரு சொன்
ணன் எழு
த்து இப்ப
டிக்கு பெரி
யமாரு வகு
த்தன் எழு
த்து காரிரா
மன் இராம

கவுண்டன்
எழுத்து இப்
படிக்கு இவர்
கள் சொல்ல
சிக்கையன் எ
ழுதினபடிக்
கும் இந்தக்கல்
வெட்டுப் பாரி
சம் எழுதி
னேன் நடு
விக் கவுண்
டன் பந்திய
ப்பனேன் ச
ந்திராதித்தவ
ரை நடத்திக்
குடுப்போமா
கவும் இத்த
ன்மம் செலு
த்துவான் சீ
பாதம் தலை
மேலே யி
த்தை யிற
ங்கல் செய்
வான் வ
ழியே
எழச்சம்
மறுவா
ன்

தேனோலை எண் 21/1976

# பிரான்மலைப் பட்டயம்

## பட்டயம்

இடம் : இராமநாதபுரம், திருப்பத்தூர் வட்டம், பிரான் மலையில் உள்ள செப்பேட்டின் நகல்.

காலம் : மிகவும் பிற்பட்டது.

படித்து வந்தவர் : புலவர் செ. இராசு, பி. லிட்.

ட ஸ்ரீ மகா மண்டலேஸ்வரன் அரியதள விபாடன் பாஷைக்கு தப்புவராயர் கண்டன் கண்ட நாடு கொண்ட நாடு குடாதன் பாண்டி மண்டலத் தாபனாச்சாரியன் சோழ மண்டலப்ரதிஷ்னாச் சாரியார் தொண்ட மண்டல பிரதாபனாச்சாரியானான சாளுவன் கெட்டாரி உடையோன் ஒடுக்கின தப்புவார் கண்டன் சேடி கட்டு வார் முண்டன் சாடி கார்க்கார் கண்டன் சம்மேட்டு நாராயணன் வங்கி நாராயணன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணமும் கஜ வேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராச மார்த்தாண்டன் ராஜ கம்பீரன் மல்லிகார்ச் சுன மகாராயர் வீமராயர் விசயராயர் அசுர சூர விக்கிரமாதித்த நற்சிப்பான் அசுவபதி கஜபதி நரபதி தஷ்சிணாதிபதி ப்திருவிராச்சியம் பண்ணி அருளுகின்ற கலியுக சகாப்தம் நாலாயிரத்து எழுநூற்றைந்து மேல் செல்லா நின்ற அருவூருப் பட்டணம் பொன்னமராவதி (கமரா) ராயமானியம் துரை அவர்கள் உக்கிர வீர பாண்டிய ராசர் அவர்கள் அழைத்து வந்த நகரம் காரைக்காடு தொண்ட மண்டலத்தில் போயி ஏழு வருஷம் காத்து இருந்தும் அங்கு மரியாதை பண்ணி கரிகால சோழ உக்கிர வீரபாண்டிய ராசர் அவர்கள் சிநேகிதம் கொண்டு அஞ்சு நகரத்துக்கும் சுவையானவர் அரிபுர நகரம் உள்ளிட்டார்க் கும் பொன்மாரி பொழிவவர் நாடு அருவூருப்பட்டணம் பொன் மாரி :லிங்க சுவரும் சிறு சோழ கம்பீர வளநாடாகிய கோநாடு பிராமலை சூழ்ந்த பொன்னமவராதி வளநாடு ஆனதில் கொடுமுடி

பிராமலையில் சோடு முடி கைலையேங்கிரி நாதர் சுவாமிக்கும் அம்மன் தேனாட்சிக்கும் விஸ்வநாத ஸ்வாமிக்கும் விசாலாட்சி அம்மனுக்கும் மங்கபாக ஈஸ்வரருக்கு அம்மன் பாகம் பிரியாள் ஈஸ்வரிக்கும் சொக்க நாதஸ்வாமிக்கும் அம்மன் மீனாட்சி அம்மனுக்கும் உலகளந்தான் நரசிங்கப் பெருமாளுக்கும் வளர்குடி ராராய மானிய துரை அவர்கள் உக்கிர வீர பாண்டி ராசன் அவர்கள் அழைத்து வந்து ஐஞ்சுக்கும் தலையானவர் அரியுர நகரம் உள்ளிட்டவர்க்கும் தலத்தார் மகத்தாருக்கும் பண்ணி வைத்த உபையமாவது பூங்கொண்ட நாடு ஆனதில் தீபசந்தி மங்கலம் நகர்மடம் உள்ளது புரவும் சருவ மானியத்துக்குக் குருசாமிக்கும் அஞ்சு நகர்க் குருக்களுக்கும் நகர் மடம் உள்னது புரவில் அஞ்சுக்கு மூணு பங்கு போக ரெண்டு பங்கும் நகரம் அஞ்சுக்கும் மத்திசம் அருவூரு பட்டணம் பொன்மாரிலங்கம் தேவதாயத்துக்கும் பிரா மலை தேவதாயத்துக்கும் ஆக 2 வகை சாலிவாக்ன சகாத்தம் 1134 மேல் செல்லாயி நின்ற பிங்கல வருஷம் ஐப்பசி மாதம் 7 தி சீய சோழ கெம்பீர வளநாட்டில் கலியுகம் வரைக்கி காணியாட்சிக்கு விபரம் கொண்டு நம்பியார் வகை (௨) ஷ்தானிகாள் சிறைவிவி நாதர் பட்டர் ஆறு சடைப்பட்டர் ஆக வகை 2 ... ... ... ... ... ... தேனாறுடையான் மங்கை பாகம் வயத்தியநாதன் போருக்கு நல்லாள் மாணிக்கத்தாள் நகரம் அடியான அறுகை(யூ)ர் உபயமா வது நம்பியாருக்கு நஞ்சையில் மதகுடி எந்தலும் புன்செயில் உளம விரைப்படி காடும் நீக்கிச் சுவாமியாருக்கும் உபயமாவது நஞ்சையில் குறிஞ்சி ஏந்தல் செங்கப் பள்ளம் ஏந்தலும்புன்சையில் ளம விரையம் காடும் தள்ளி தலத்தார்(ர்) அஞ்சு வகைக்கு தலம் நதேறுதாயத்தில் பிஞ்னசயில் 30 ள விரையடி காடும் நஞ்சையில் செல்லன் ஏந்தல் வலையன் ஏந்தல் செட்டி ஏந்தல் குருந்தன் ஏந்தல் நாதமங்கந் ஏந்தலில் சேமப்பதியூறாப்படிக்கு அரிபுர நகரம் உள்ளிட்டார் அசதி நகர்த்துக்குள் தலையானவர் சாலிவாகன சகாத்தம் 1304 மேல் வைத்த உபையமாவது இப்படிக்கு ஷயூர்க் கணக்கு அறுக்காத வட்டகை மூவேந்தர் வேளார் திருப்பூ அழகில்ப் பெரிய நாயகி துணை............

பின்குறிப்பு :—இதன் காலம் கி. பி. 1326.

# கொங்கு

சிறப்பாசிரியர் :

க. ப. அறவாணன்

ஆண்டுக் கட்டணம் ரூ. 6-00

தனி இதழ் 50 காசுகள்

முகவரி :

60, அய்யாவு நாயுடு குடியிருப்பு

சென்னை-600 029

தொலைபேசி : 423791

---

**தேனோலை வாசகர்களே**

முதலில் தேனோலையின் முகவரி மாற்றத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

தேனோலை,
4/11 இரண்டாவது சடைய படையாச்சி தெரு,
வேலூர் ரோடு,
திருச்செங்கோடு-637211

சந்தா அனுப்பாதோர் விரைந்து அனுப்பிடுக.

ஓலைச் சுவடிகள் வைத்திருப்போர், எமக்குத் தகவல் தருக. முடிந்தால் படித்து எழுதி அனுப்புக.

உங்களுடைய மேலான கருத்துக்களை எழுதுக

தேனோலையின் துணை வெளியீடான கொங்கு தற்போதும் சென்னையிலிருந்தே வருகின்றது. மேலே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்க.

பதிப்பாசிரியர்

All kinds of tyres from Scooter to Tractor tyres

are retcaded most scientifically in our Modern Plant

★

*FOR QUICKER AND DEPENDABLE RETREADING*

Contact :

# The Anamallais Retreading Corporation

42, MOUNT ROAD — GUINDY

MADRAS - 600032

Dial : 431157 - 431200 - 432926

OFFICE OF THE CURATOR
RECEIVED
6 அக 1976
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

ஆசிரியர், வெளியிடுபவர் : கொடுமுடி சண்முகப் பிரகதம்